| O.S.No. 304/2020 | PW1: திருமதி. ஜெயலட்சுமி<br>க/பெ. திரு. சுந்தரபாண்டியன் | 10-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>4–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நான் வடஇலுப்பை கிராமத்தில் வசித்து வந்தேன் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வடஇலுப்பை கிராமத்தில் வசித்து வரவில்லை என்றாலும், பூர்வீகமாக பெங்களூருவில் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தினை கூட்டாக எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்றாலும், பிரமாண வாக்குமூலத்தில் பாரா 2–ல் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளும், சுந்தபாண்டியனும் பெங்களூரில்தான் வசித்து வருகின்றனர்.

2. தாவா சொத்து வடஇலுப்பை கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தினை அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது கூட்டுப்பட்டாவில் இருந்து வந்தது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்தது என்றாலும், அதனை 4–ம் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்றார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை சுந்தரபாண்டியன் இறந்தபிறகு நாங்களும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுந்தரபாண்டியனுக்கு திருமணம் நடந்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், சுந்தரபாண்டியன் முகவரிக்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுந்தரபாண்டியனுக்கு திருமணம் ஆகாததால்தான் அவர் அவரது பெற்றோர் வீட்டு முகவரியில் வசித்து வந்தார் என்றாலும், நான் தனியான முகவரியில் வசித்து வந்தேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள திருமண பத்திரிக்கை, திருமண புகைப்படம் ஆகியவை வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நடேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்தில்தான் பரிகாரம் கேட்கிறேன் என்று சொன்னால் சரிதான். நடேசன் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சுந்தரபாண்டியனுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை. தாவா சொத்தை 4-ம் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், அதனால் தாவா சொத்தை பொறுத்து நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், எங்களுடைய தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- ஜெயலட்சுமி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.10 13:27:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**

| O.S.No. 304/2020 | PW2: திரு. கிருஷ்ணமூர்த்தி<br>த/பெ. திரு. சித்திரை | 10-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>4–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது பூர்வீகம் வடஇலுப்பை கிராமம். நடேசன் எனது பெரியப்பா. அவருக்கு பாக்கியலட்சுமி, சரஸ்வதி, கலையரசி மகள்கள், மகன் பெயர் சுந்தரபாண்டியன். வடஇலுப்பை கிராமத்தில் நடேசன் பெயர் கொண்ட வேறு எவரேனும் இருக்கிறார்களா என்றால் இல்லை. எனது பெரியப்பா நடேசன் குடும்பத்துடன் பெங்களூரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தானது வடஇலுப்பையில் உள்ளது. நடேசன் குடும்பத்தினர் பெங்களூரில் இருந்துகொண்டு வந்துபோக பயிர் வைப்பார்கள்.

2. நான் 2009–ம் ஆண்டு நடேசன் மகனிடமிருந்து நிலத்தினை கிரையம் வாங்கினேன். அதேபோல், பிரபு என்பவரும் வீட்டு மனையினை நடேசன் மகனிடமிருந்து கிரையம் வாங்கினார். 4–ம் பிரதிவாதி தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்னர் தாவா சொத்தினையும் என்னையும் வந்து பார்த்தாரா என்றால் பார்த்தார். அப்போது தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா கூட்டாக இருந்தது என்றால் 4 பேர் பெயரில் இருந்தது. தாவா சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில்தான் பட்டாவானது கூட்டாக இருந்தது என்றாலும், அதனால்தான், 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் 4–ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரம், பிரபு வாங்கிய கிரைய பத்திரம் ஆகியவற்றில் சுந்தரபாண்டியன் கையெழுத்து போட்டார். அந்த கிரைய பத்திரங்களில் 1 முதல் 3 பிரதிவாதிகள் கையெழுத்து போடவில்லை. அந்த சொத்தானது நடேசன் மற்றும் எனது தந்தை சித்திரைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும்.

3. வாதிகள் அழைத்ததின்பேரில்தான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுந்தரபாண்டியனுக்கு திருமணம் நடந்தபோது நான் சென்றேன். சுந்தரபாண்டியனுக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும், அதனால்தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல, சுந்தரபாண்டியனுக்கு திருமணம் நடந்து ஊரிலேயே இருந்தார். வடஇலுப்பை கிராமத்தில் திருமணத்திற்கு பிறகு சுந்தரபாண்டியன் சுமார் ஓராண்டு காலம் இருந்தார். தாவா சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வந்ததில்லை. தாவா சொத்தினை தற்போது 4-ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 4-ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தபோதுதான் அதுபற்றி தெரியவந்தது. தாவா சொத்தினை 4-ம் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், வாதிகள் அழைத்து வந்ததன்பேரில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- கிருஷ்ணமூர்த்தி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.10 13:27:28 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**